# ஓமனிலிருந்து பிரதமர் மோடி தொலைபேசி மூலம் வாழ்த்து பெறுகிறார்

ஜூன் 11, 2024

ஓமன் மாண்புமிகு சுல்தான் ஹைதம் பின் தாரிக்கிடம் இருந்து பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களுக்கு இன்று தொலைபேசி அழைப்பு வந்தது.

அண்மையில் நடந்து முடிவடைந்த பொதுத் தேர்தலுக்குப் பிறகு மூன்றாவது முறையாக பிரதமராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமருக்கு சுல்தான் ஹைதம் பின் தாரிக் தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து கொண்டார்.

ஓமனுக்கும் மற்றும் இந்தியாவுக்கும் இடையிலான பல நூற்றாண்டுகள் பழமையான நட்புறவை வலியுறுத்திய அவர், இந்திய மக்களின் முன்னேற்றம் மற்றும் செழிப்புக்காக தனது வாழ்த்துக்களைத் தெரிவித்து கொண்டார்.

அவருடைய அன்பான வாழ்த்துக்களுக்கு நன்றி தெரிவித்த பிரதமர், 2023 டிசம்பரில் இந்தியாவுக்கு அவர் மேற்கொண்ட வரலாற்றுச் சிறப்புமிக்க பயணம் அனைத்து துறைகளிலும் இருதரப்பு ஒத்துழைப்பை ஆழப்படுத்த வழிவகுத்தது என்று குறிப்பிட்டார்.

இந்தியா-ஓமன் கூட்டாண்மையை மேலும் ஆழப்படுத்தவும் வலுப்படுத்தவும் இரு நாடுகளின் பரஸ்பர நலனுக்காக இரு தலைவர்களும் தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தினர்.

மாண்புமிகு மன்னருக்கும், ஓமன் மக்களுக்கும் வரவிருக்கும் ஈத் அல் அதா பண்டிகையை முன்னிட்டு பிரதமர் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்து கொண்டார்.

**புது தில்லி**
**ஜூன் 11, 2024**